புதுச்சேரி காவல்துறை

# மாணவ-மாணவிகள் பாதுகாப்புப் பற்றிய காவல்துறையின் வேண்டுகோள்



## பள்ளி நிர்வாகத்திற்கு

* பள்ளித் தொடங்கும்போதும் முடியும்போதும் பள்ளி நிர்வாகம் பள்ளி அலுவலர்களைக் கொண்டு சாலை போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவேண்டும்.
* குழந்தைகளை, பெற்றோர்கள் பள்ளியில் விடும்போது குழந்தைகள் பள்ளியை விட்டு வெளியேறா வண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டும்.
* பள்ளி முடிந்தவுடன் குழந்தைகளை, பெற்றோர்கள் (அல்லது) உறவினர்கள் அழைத்துச் செல்கிறார்களா என்பதை பள்ளியின் அலுவலர்கள் கண்காணிக்க வேண்டும். அறிமுகமில்லாத புதிய நபர்கள் குழந்தைகளை அழைத்துச் செல்வதை நிர்வாகம் அனுமதிக்கக்கூடாது.
* வீட்டுக்குச் சென்ற குழந்தைகளைத் தவிர பெற்றோர் (அல்லது) உறவினர்கள் அழைத்துச் செல்லாத குழந்தைகளை பள்ளியின் பாதுகாப்பில் வைத்துக்கொள்வதுடன் மேற்படி குழந்தைகளின் உரிய பெற்றோர்களுக்கு தகவல்கள் தெரிவித்து அந்த குழந்தைகளை பள்ளியிலிருந்து அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யவேண்டும்.
* பள்ளியில் படிக்கும் குழந்தைகளின் பெயர் மற்றும் முகவரி, தொடர்பு எண் ஆகியவற்றின் விவரங்கள் அடங்கிய கோப்பு (File) வைத்திருக்கவேண்டும்.
* பள்ளிக்கு வராத குழந்தைகளை, அடிக்கடி தாமதமாக வரும் குழந்தைகளைப் பற்றி அவர்களின் பெற்றோரிடத்தில் தெரிவிக்கவேண்டும்.
* பள்ளி நடந்து கொண்டிருக்கும்போது தனி நபரோ, அறிமுகமில்லாதவரோ குழந்தைகளைச் சந்திப்பதை அனுமதிக்கக்கூடாது.
* பள்ளியின் அருகில் மற்றும் எதிரில் பாதுகாப்பு நலன்கருதி கண்காணிப்பு காமிரா (CCTV Camera) அமைத்தல் அவசியம். அதில் வந்து போகும் நபர்களைப் பற்றி அறிவதுடன் குற்றவாளிகளையும் அடையாளம் காணமுடியும்.
* பள்ளியில் பெற்றோர் கூட்டம் கூட்டும்போது பள்ளி அமைந்துள்ள இடத்தின் பொறுப்பு காவல் ஆய்வாளர் / உதவி ஆய்வாளரை அழைத்து பாதுகாப்பு சம்மந்தமாக சுமூகமான உறவை மேம்படுத்த வேண்டும்.
* இடைவேளை நேரத்தின்போது பள்ளியை விட்டு குழந்தைகளை வெளியே அனுப்புவதும், மிட்டாய் / S தின்பண்டங்கள் வாங்கி உண்பதை அனுமதிப்பதும் கூடாது.
* பள்ளிக்கு அழைத்துச்செல்லும் வேன், ஆட்டோ, பஸ் மற்றும் இதர வாகனங்கள் ஓட்டுநர்களிடம் ஓட்டுநர் உரிமம் மற்றும் வண்டி ஓட்டுவதற்கான ஆவணங்கள் சரியாக உள்ளனவா என்பதையும் அவர்களின் கைபேசி(Cell), தொலைபேசி (Phone) எண்களை மற்றும் முகவரியை அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.
* ஆட்கடத்தல், குழந்தை கடத்தல் மற்றும் வழிப்பறி குற்றச் செயல்களை தடுக்கும் வகையில் புதுச்சேரி காவல்துறை பாதுகாப்பு, கண்காணிப்புப் பணி ஆகியவற்றில் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. வரும் காலத்தில் மேற்கண்ட குற்றச் செயல்களைத் தடுக்கும் பொருட்டு ஆசிரியர்கள், பள்ளி மாணவர்களின் வாகன ஓட்டுநர்கள் அறிவுறுத்தல்களைக் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| Control Room | 100 |
| Villianur PS | 2666321 |
| AWPS (Villianur) | 2660385 |
| Traffic (Villianur) | 2661246 |

அமஅபு—137/7—3,000 பிரதிகள்(181)—31-1-2013.